# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

**O.S. No.107/2013** **(வா.சா-3)**

2019 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆம் நாள் திங்கட்கிழமை **திருமதி.P.K.தமயந்தி,எம்.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமதி.S.உமாமகேஷ்வரி | | |
| த/பெ. | : | சமயம் | : |
| க/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலுகா | : | | |

**முதல் விசாரணை**

நான் கோயமுத்துார் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன். மாவட்ட பதிவாளருக்கு சம்மன் அனுப்பப்பட்டதன்பேரில் அவரது ஒப்புதல் பெற்று எண்.3890/ஆ1/2019, நாள் 21-06-2019 என்ற உத்தரவின் பேரில் பணிச்சூழ்நிலை காரணமாக மாவட்ட பதிவாளர் நேரில் ஆஜராக இயலாக காரணத்தால் என்னை இவ்வழக்கில் ஆஜராகி விளக்கமளிக்க உத்தரவிட்டதன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன். சம்மனில் 1977 ஆம் ஆண்டு எம்.ஆர். குட்டி என்ற முத்திரைத்தாள் விற்பனையாளர் விற்பனை செய்த முத்திரைத்தாளின் விபரம் கேட்டு அனுப்பப்பட்ட சம்மனை பெற்றுக்கொண்டு நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கின்றேன். சம்மனில் கேட்கப்பட்டட ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. எங்களது அலுவலகத்தில் 1983 ஆம் ஆண்டிலிருந்து முத்திரைத்தாள் விற்பனை சம்பந்தமாக ஆவணங்கள் பராமரிக்கப்படுகின்றன. 1977 ஆம் ஆண்டு விற்கப்பட்ட முத்திரைத்தாள் சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் பராமரிக்கப்படவில்லை என்பதால் மேற்படி விவரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

சில நேரங்களில் குறிப்பிட்ட ஊர்களீல் முத்திரைத்தாள் கிடைக்கப்பெறவில்லை என்றால் அதே குறிப்பிட்ட முத்திரைத்தாள்களை வேறு ஊர்களில் நாம் பெற்றுக்கொள்ளமுடியும் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு நாம் பெற்றுக்கொள்ளும் முத்திரைத்தாள்களில் எந்த விலாசம் வேண்டுமானாலும் குறிப்பிட்டு முத்திரைத்தாள் வாங்கிக்கொள்ளலாம் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் 10-01-1977 ஆம் வருட ஆவணம் உண்மைத்தன்மையானதா என்று கேட்டால் மேற்படி 1977 ஆம் ஆண்டு விற்கப்பட்ட முத்திரைத்தாள் பற்றிய விவரங்கள் எதுவும் ஆவணங்களில் பராமரிக்கப்படவில்லை. அதனால்

ஆவணத்தைப்பார்த்து ஆவணம் உண்மையானதா என்பதை என்னால் சொல்ல இயலவில்லை. 1977 ஆம் ஆண்டு கோயமுத்தூரில் யார் சார்பதிவாளராக இருந்தார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்று கேட்டால் எனக்குத் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்டும் ஆவணத்தில் முத்திரை விற்பனையாளர் எம்.ஆர்.குட்டி என்பவர் முத்திரைத்தாள் விற்பனையாளர் என்ற கோதாவில் கையொப்பமிட்டு அவணம் எழுதப்பட்டுள்ளதால் அவர் பதிவு பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர் என்று சொன்னால் அதைபற்றி எனக்குத் தெரியாது. 1977 ஆம் ஆண்டில் 1 ஆம் மாதத்திலிருந்து முதல் 12 ஆம் மாதங்கள் முடிய முத்திரைத்தாள் விற்பனையாளர், சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அவர் விற்றுள்ள முத்திரைத்தாள் பற்றிய விவரங்களை பதிவேட்டில் உள்ளபடி ஒப்பிட்டு பார்க்ப்படும் என்று சொன்னால் சரிதான். எனக்கு இவ்வழக்கின் விவரங்களை பற்றி எதுவும் தெரியாது என்று சொன்னாலும், மாவட்ட பதிவாளர் வந்தால்தான் சரியான விவரங்கள் சொல்லமுடியும் என்று சொன்னால் சரியல்ல. நான் கோயமுத்தூர் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் எவ்வளவு காலமாக பணிபுரிகிறேன் என்றால் கடந்த எட்டுமாதகாலமாக பணிபுரிந்து வருகிறேன். முத்திரைத்தாள் விற்பனையாளர்களால் விற்கப்பட்ட முத்திரைத்தாள்களை ஒப்பிட்டு பார்க்கப்பட்ட பதிவேடுகள் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்படுகிறது என்று சொன்னால் சரிதான். ஒரு அசையா சொத்து ரூ.100/-க்கு மேல் மதிப்புடையதாக இருந்தால் அது கண்டிப்பாக பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அசையா சொத்தின் மதிப்பு ரூ.90/- ஆக இருப்பதால் மேற்படி ஆவணத்தை பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். அடமான பத்திரம், உயில்சாசனம் மற்றும் கொடை ஆவணம் ஆகிய மூன்று ஆவணங்கள் மட்டும்தான் சாட்சிகள் கையெழுத்து செய்ய வேண்டும் என்று சொன்னால் எல்லா ஆவணங்களும் சாட்சிகளின் கையெழுத்து பெறப்பட வேண்டும். இந்த ஆவணத்தை விற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர் குட்டி என்பவர் உயிருடன் உள்ளாரா, இல்லையா என்ற விவரத்தை சம்மனை பெற்றுக்கொண்டு நான் விசாரித்தேனா என்று கேட்டால் விசாரிக்கவில்லை. தற்போது அவர் உயிருடன் உள்ளாரா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் எழுதப்பட்டுள்ள மூன்று பக்கங்களிலும் எழுதிக்கொடுத்தவர் கைரேகை செய்தும், சாட்சிகள் இரண்டு நபர்களின் பெயர்கள் குறிப்பிட்டும், ஆவணத்தை எழுதிய நபரின் பெயரும் குறிப்பிட்டு இந்த ஆவணம் முறையாக எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

**வாதிதரப்பில் மறுவிசாரணை**

1983 ஆம் ஆண்டிலிருந்து முத்திரைத்தாள் விற்பனை சம்பந்தமாக பதிவேடுகள் பராமரிக்ப்பட்டு வருகின்றது என்றால் சரிதான். 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் உள்ள முத்திரைத்தாள் விற்பனை சம்பந்தமாக பதிவேடுகள் எங்கு பராமரிக்கப்பட்டன என்றால் ஒரு வேளை வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டிருக்கலாம். அதைப்பற்றி எனக்குத் தெரியவில்லை. சொத்து யார்

பெயரில் வாங்கப்படுகிறதோ அவர்கள் பெயரில்தான் முத்திரைத்தாள் பதிவு செய்யப்படும். ஆவணத்தில் சாட்சிகள் அப்பா பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்படும்.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

/sd/ P.K.Dhamayanthi
மாவட்ட உரிமையியல் நீதிபதி
பல்லடம்